தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18-11-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## உலக உணவு பாதுகாப்பு மையத்துடன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

உலகளவில் உள்ள பன்னிரெண்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் இஸ்ரேலில் உள்ள எரிமலை மையத்தின் வேளாண் ஆராய்ச்சி கழகம் இணைந்த (Agriculture Research Organization) கூட்டமைப்பான, அமெரிக்க நாட்டின் வெர்ஜீனியா மாநிலத்தில் அமைந்துள்ள, உலக உணவு பாதுகாப்பு மையத்துடன் இந்தியாவில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இணைந்து, வளரும் நாடுகளின் அறுவடை பின்சார் உணவு இழப்புகளைக் குறைக்க முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்பு ஆராய்ச்சிகளை மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக முதுகலைப்பட்டப்படிப்பு கல்வியின் முதன்மையர் முனைவர். ச. மோகன் அவர்கள், வேளாண் மற்றும் தோட்டக்கலைப்பயிர்களை அறுவடைக்குப் பின் சேமிக்கும் பொழுது ஏற்படும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பல புதுமையான தொழில்நுட்பங்களை உருவாக்கியுள்ளார். இவரின் முயற்சியால் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

உலக உணவு பாதுகாப்பு மையமானது, பன்னிரெண்டு முக்கிய ஆராய்ச்சி பல்கலைக்கழகங்கள் (ஆறு கண்டங்களில் உள்ளது) மற்றும் இஸ்ரேல் எரிமலை மைய வேளாண் ஆராய்ச்சி அமைப்பு ஆகியவற்றுடன் கூட்டாக இணைந்து உலக தரம் வாய்ந்த அறுவடைப்பின் சார் கல்வியை, வளரும் நாடுகளில் உள்ள முதுகலை மற்றும் முனைவர் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வழங்க திட்டமிட்டுள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழக மாணவர்கள் புதிய அறுவடை பின்சார் தொழில்நுட்பங்களில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள முடியும்.

அதிகரித்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப, அதிக உணவு உற்பத்தியை உலக மக்கள் தொகைக்கு அளிக்க வேண்டும் எனில் அறுவடை பின்சார் பாதுகாப்பு தொழில்நுட்பங்களை பின்பற்ற வேண்டும் என்று அறுவடை பின்சார் நோயியல் துறையின் முன்னாள் விஞ்ஞானி (ஓய்வுபெற்ற USDA ஆராய்ச்சியாளர்) மற்றும் உலக உணவு பாதுகாப்பு மையத்தின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர்.சார்லஸ் எல்.வில்சன் தெரிவிக்கின்றார். அமெரிக்காவிலுள்ள உலக உணவு பதப்படுத்தும் கல்வி நிறுவனம் என்ற தன்னார்வ தொண்டு அமைப்பு (World Food Preservation Education Foundation) உலக உணவு பாதுகாப்பு மையத்துடன் இணைந்துள்ள பல்கலைக்கழகங்களில் நடைபெறும் அறுவடை பின்சார் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் மாணவர்கள் பங்குகொண்டு பயனடைய கல்வி ஊக்கத்தொகை அளிக்கின்றது.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்